Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 10

செவ்வாய்க்கிழமை 06 டிசெம்பர் 2022

கார்த்திகை 20 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# கடந்தகால மனக்கசப்புக்களை மறப்போம் நம்பிக்கை வைத்து பேச்சுக்கு வாருங்கள்



## ஜனாதிபதி ரணில் மீண்டும் அழைப்பு

**கொழும்பு, டிசெம்பர் 6**

**கடந்த கால மனக்கசப்புக்களை பேசிக்கொண்டிருப்பதால் காலம்தான் வீண்விரயமாகும். வெளியாரின் தலையீடு இல்லாமல் நாம் ஒன்றுகூடி பேச்சு மூலம் தீர்வை அடைவோம். அதில் நம்பிக்கை வைத்து தமிழ்த் தலைவர்கள் செயற்படவேண்டும் - இவ்வாறு ஆலோசனை கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

»11

## வடக்கு விவசாயிகளுக்கான உரம் நேற்றுக் கையளிப்பு

கொழும்பு, டிசெ. 6

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வடக்கு மாகாண மாவட்டங்களுக்கும், அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் உள்ள ஒரு லட்சத்து 93 ஆயிரம்

»11



## சிட்டி விளக்கு விற்பனை யாழில் நேற்று அமோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 6

திருக்கார்த்திகையை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பல இடங்களிலும் விளக்கீட்டுக்கான சிட்டி விளக்குகளைக் கொள்வனவு செய்வதில் மக்கள் கடந்த காலங்களைவிட

»11

## வடக்கு மாகாண ஆசிரியர்கள் வெள்ளிக்கிழமை போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 6

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முறைகேடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாகவும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கக்கோரி வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

»11

## லிட்ரோ எரிவாயு ரூ.250ஆல் அதிகரிப்பு

*லாப்ஸ் விலையில் மாற்றமில்லை*

கொழும்பு, டிசெ. 6

லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளது. ஆனாலும் லாப்ஸ் எரிவாயு நிறுவனம் எந்தவொரு அதிகரிப்பையும் மேற்கொள்ளவில்லை.

லிட்ரோ நிறுவனத்தின் 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 250

»11



*யாழ். - கொழும்பு*

## சொகுசுப் பேருந்து நேற்றுத் தடம்புரள்வு

*22 பேருக்கு காயம்*

யாழ்ப்பாணம், டிசெ. 6

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சொகுசுப் பேருந்து கிளிநொச்சி, இரணைமடுக்கு அருகில் தடம்புரண்டு விபத்துக்

»11

## சான்றுப்பொருளான ஹெரோய்ன் சந்தையில் மீண்டும் விற்பனை

பொலிஸாரின் பொட்டுக்கேடுகளை *அம்பலப்படுத்தினார் நீதி அமைச்சர்*

கொழும்பு, டிசெ. 6

சான்றுப் பொருள்களாக, பொலிஸாரின் சான்று அறைக்குச் செல்லும் போதைப்பொருள்கள் கோதுமை மாவாக மாறும் நிலையில், பின்னர் அதே போதைப்பொருள்கள் மீண்டும்

»11

## பல்கலை மாணவிகளுடன் அத்துமீறும் ஆசாமிகள்

அந்தரங்க உறுப்புக்களை காட்டி பாலியல் தொல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கொக்குவிலில் உள்ள பெண்கள் விடுதி மற்றும் வாடகை அறைகளில் தங்கி உள்ள மாணவிகள் பல்கலைக்கழகத்துக்கு காலையிலும் மாலையிலும் வீதியால் செல்லுகின்ற பொழுது சில ஆசாமிகள் பாலியல் தொல்லை

»11

## ஓட்டோ டீசல் விலை ரூ.10 ஆல் குறைப்பு

கொழும்பு, டிசெ. 6

ஓட்டோ டீசலின் விலை நேற்று நள்ளிரவு முதல் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, தற்போது 430 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் டீசலின் புதிய விலை 420 ரூபாவாகும். (ஒ-17)

## வியாழக்கிழமை முதல் வடக்கில் கடும் மழை!!!

யாழ்ப்பாணம், டிசெ. 6

வடக்கு மாகாணத்துக்கு நாளை மறுதினம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 10 ஆம் திகதி சனிக்கிழமை வரையிலான காலப்

»11

Digitized by Noolaham Foundation.

கூட்டமைப்பின் அழைப்பு ஏற்பு

# அரசியல் தீர்வுப் பேச்சுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தயார்

கொழும்பு, டிசெ. 6

அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராகவுள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுக்குச் செல்வதற்கு முன்பாக, மலையகக் கட்சிகளையும் முஸ்லிம் கட்சிகளையும் தனித் தனியாகச் சந்தித்துப் பேச்சை முன்னெடுப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேசக்கரம் நீட்டியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு தொடர்பில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளுடன் தனித்தனியாக பேச்சை நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்தமையை நாம் வரவேற்கின்றோம்.

இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராகவுள்ளது.

எனினும், அதற்கான அழைப்பு எமக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக விடுக்கப்படவில்லை - என்றார். (ம-14-22)

நெருக்கடிகள் இருந்தாலும்

## தேர்தல் பிற்போடப்படாது!

மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 6

பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும், உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடும் திட்டம் எதுவும் இல்லை. திட்டமிட்டவாறு தேர்தல் நடத்தப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும், உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை. தங்களுக்குத் தான் மக்கள் ஆதரவுள்ளது என்று மார்தட்டிக்கொள்ளும் எதிரணிகளுக்கும் மக்கள் யார் பக்கம் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, தேர்தலுக்குத் தயாராகுமாறு கட்சித் தலைவர்களுக்கு சவால் விடுக்கின்றேன். நாட்டு மக்கள் தேர்தலைக் கோரவில்லை. அரசியல் கட்சிகள்தான் துடிக்கின்றன. நாடு பற்றியெரியும்போது, அதை அணைப்பதற்கு ஒத்துழைக்காத தரப்புகளுக்கு தேர்தல் ஊடாக மக்கள் பாடம் புகட்டுவார்கள் - என்றார். (ம-14-44)

நாடாளுமன்றம், உள்ளூராட்சி

## இரண்டு தேர்தல்களையும் மார்ச் மாதம் நடத்துங்கள்

ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 6

நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றை எதிர்வரும் மார்ச் மாதம் ஒரே நேரத்தில் நடத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பெப்ரவரி மாதமளவில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் வந்துவிடும். அதே நேரம் மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

தற்போதைய பொருளாதார நிலைமையின்கீழ் இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக நடத்தினால் செலவை மீதப்படுத்த முடியும்.

ஜனநாயகம் பேசுகின்ற, மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற ஒரு தலைவர் என்றால், ரணில் இதற்கு இணங்கவேண்டும் - என்றார். (ம-14-22)

தேர்தல் நடந்தால்

## பெரும்பான்மை என்பது எவருக்கும் கிட்டாது!

விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் பெரும்பான்மை ஆசனங்கள் எந்தக் கட்சிக்கும் கிடைக்காது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இப்போதைய நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை கிடைக்காது. 80 ஆசனங்களை எந்தவொரு கட்சியும் எடுக்காது.

இருக்கின்ற மிகுதி இரண்டு வருடங்களுக்குள் ஏற்படும் சில மாற்றங்கள் இந்த எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கோத்தாபய ராஜபக்சவுக்கு வழங்கிய 69 இலட்ச வாக்குகளில் பெரும் பகுதி பெரமுனவுக்கு எதிராகவே உள்ளது' என்றார். (ம-22)

## தேர்தலைப் பிற்போடின் சர்வதேசம் பகைக்கும்!

இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 6

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சித்தால் சர்வதேச ஆதரவை முழுமையாக இழக்க நேரிடும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் தெரிவித்ததாவது:-

'மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு தேர்தல் நடத்தப்படவேண்டும், அதுவே ஜனநாயகப் பண்பாகும்.

எனினும், தேர்தலை இழுத்தடிக்க ஆளுந்தரப்பு முற்படுவதாக அறியமுடிகின்றது. இந்த ஜனநாயக விரோதச் செயலில் அரசு ஈடுபட்டால், சர்வதேச ஆதரவை இழக்க நேரிடும். சர்வதேச கடன்களைப் பெறுவதிலும் சிக்கல்கள் உருவாகும்.

எனவே, ஜனநாயக வழியில் தேர்தல் நடத்தப்படவேண்டும். அதேவேளை, யார் ஆட்சிக்கு வந்தாலும் எமது தரப்பு தர்மத்தின் பக்கமே நிற்கும்' - என்றார். (ம-44)

## உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த தே.ஆணைக்குழுவின் முடிவே இறுதி

சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 6

பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டாலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவது சாத்தியம் என்று சட்டமா அதிபர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி எல்லை நிர்ணயக்குழு காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்படுவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அண்மையில் தீர்மானித்திருந்தது.

அதன்படி, தேர்தல் தொடர்பான சட்டமா அதிபரின் பரிந்துரை தற்போது தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளது.

தற்போதைய நிலையின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுமாயின் அதை ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-14-இ)

## தேர்தல் ஒன்றுதான் அனைத்துக்கும் தீர்வு

சஜித் மீண்டும் வலியுறுத்து



அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு தேர்தல் மூலம் புதிய மக்கள் ஆணையைப் பெறுவதுதான் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'பிட்ச் தரப்படுத்தல் நிறுவனம் இலங்கையின் நீண்டகால உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மிக [illegible] படுத்தியுள்ளது.

இந்த அவதானம் குறித்து 2020ஆம் ஆண்டு முதலே நாம் எதிர்க்கட்சியாகச் சுட்டிக்காட்டிய போதிலும் அப்போதைய ஆட்சியாளர்கள் அதனை கேலிசெய்து நாட்டைத் தவறாக வழிநடத்தினார்கள்.

இவ்வாறான நிலையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது? யார் என்ன சொன்னாலும் [illegible] நாட்டுக் [illegible] இந்த விடயத்தில் செலுத்தப்படவில்லை.

அமெரிக்கா தலைமையிலான பல மேற்கத்திய நாடுகள் எமது நாட்டில் அரசியல் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் வரை எந்தவித உதவிகளையும் செய்வதில்லை என்று கூறியுள்ளன.

8 மாதங்களில் 477 மருத்துவர்களும் 300 பொறியியலாளர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்து வருகின்றது. சுகாதாரத்துறையில் மருந்துகள் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகள் நிலவி வருகின்றன. இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரேதீர்வு தேர்தல் மூலம் புதிய மக்கள் ஆணையைப் பெறுவது தான் - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வலிதானது பொதுக்குரல்!

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதற்கு முன்னர், மலையகத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவம் செய்தும் கட்சிகளுடன் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு முடிவெடுத்திருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்த முடிவை தமிழ் முற்போக்குக் கூட்டணி வரவேற்றிருக்கும் அதேநேரம் 'முழுமையானஒத்துழைப்புடன்' கூட்டமைப்புடன் கலந்துரையாடத் தயார் என்றும் அறிவித்திருக்கின்றது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கூட்டமைப்பின் அழைப்பை சாதகமாகவே பரிசீலிப்பதற்குத் தயாராகியிருக்கின்றது.

அடுத்த சுதந்திர தினத்துக்குள் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றுக்குப் பல தடவைகள் தெரிவித்திருக்கின்றார். தமிழர் தாயகம் – தென்னிலங்கை – நாடாளுமன்றம் என்று பல்வேறு இடங்களில் இதேகருத்தை அவர் 'கார்பன்' பிரதியெடுத்திருக்கின்றார். ஆனால், 70 ஆண்டுகால அரசியலாலும் 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தாலும் தீர்க்கப்பட முடியாத இந்தப் பிரச்சினையை வெறும் மூன்றே மாதங்களில் எவ்வாறு ரணில் தீர்க்கப்போகின்றார்? என்ற கேள்விக்கான பதில் முழுக்கமுழுக்க மர்மப் பக்கங்களால் ஆனது.

ஜனாதிபதியின் இந்த குறுங்கால அவகாசக் கோரிக்கை, ஏற்கனவே எழுதப்பட்ட 'ஸ்கிரிப்ட்' ஒன்றை அரங்கேற்றும் கைங்கரியமா? என்ற சந்தேகமும் பரவலாக எழுந்த நிலையில், மாகாண முறைமைக்கு அப்பாற்பட்ட அதிகாரப் பரவலாக்கம் என்ற போர்வையில் மாவட்டச் சபைகளை தோற்றுவிக்கும் நகர்வுகளும் நாடாளுமன்றத்தில் தேசியக் கட்சிகளினால் முன்னெடுக்கப்பட்டன. ஆதலால், இந்தச் சதிவலைகளை அவிழ்த்தெறிய வேண்டுமாயின் முழுப்பலத்தையும் திரட்டிய எதிர்ப்பொன்று பதிவுசெய்யப்பட வேண்டும் அல்லது கச்சிதமான பொறிமுறையூடான பேச்சுக்கள் அரசாங்கத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்த பின்னணியில்தான் தமிழர்கள்–முஸ்லிம்கள்–மலையகத்தமிழர்கள் என்று தமிழ்ப் பிரதிநிதிகளின் பேச்சு இடம்பெறுவதற்குரிய சமிக்ஞை தற்போது பலமாக வெளிப்பட்டிருக்கின்றது.


தமிழர்கள்–முஸ்லிம்கள்–மலையகத் தமிழர்கள் என்போர் மொழியால் ஒன்றுடையவர்களாக இருந்தாலும், இனத்தாலும் பிரதேசங்களாலும் அவர்கள் வேறுபடுகின்றார்கள். அவர்களின் அரசியலும் வாழ்வியலும் கோரிக்கைகளும் இன்னோரன்ன விடயங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகவும் அதேநேரம் முரண்பட்டதாகவும்கூட அமைகின்றது. ஆதலால், 'தீர்வுக்கான பேச்சு' என்பதை ஆரம்பிக்கும்போது தமிழர்களுக்கு முஸ்லிம்களையோ, முஸ்லிம்களுக்கு மலையகத் தமிழர்களையோ அல்லது தமிழர்களையோ காரணமாகக்கூறி பிரச்சினைகளை மறைமாற்றிவிடக்கூடிய வாய்ப்பு பேரினவாத கொள்கைகள் கொண்ட அரசிடம் மிகைஅதிகம். அதுவே பேரினத்தின் தொன்றுதொட்ட பழக்கமும்கூட. ஆதலால், 'ஒற்றுமைக்குத் தேவை பொது எதிரி' என்ற சித்தாந்தத்தின் கீழ் முதலில் சிறுபான்மைக் கட்சிகள் ஓரணியில் ஒன்று திரண்டு தமக்குள் இருக்கக்கூடிய முன்பின் முரணான நிலைப்பாடுகளை – அரசியல்களைப் பேசி காத்திரமான – திடமான தீர்மானத்துடன் அடுத்தகட்டத்துக்கு நகர்வதே ஆரோக்கியமானது. அதை நோக்கிய இந்த முயற்சி உண்மையில் பாராட்டப்பட வேண்டியதுதான்.

அதேநேரம், தமிழர்களின் பிரச்சினைகளைத் தனியே தமிழர்களும், முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தனியே முஸ்லிம்களும், மலையக மக்களின் பிரச்சினைகளையே வெறுமனே அவர்களின் தலைவர்களும் பேசுகின்ற 'சபிக்கப்பட்ட' கலாசாரத்துக்கும் இந்தச் சுழற்சியான சந்திப்புக்களில் முற்றுப்புள்ளி வைக்க சிறுபான்மை மக்களின் தலைவர்கள் முன்வரவேண்டும். பொதுப்பொறிமுறையூடானகூட்டுக்குரல் வெளிப்பட்டிருந்தால் இன்று தமிழர்களுக்குத் தீர்வு கிட்டியிருக்கலாம், முஸ்லிம்களுக்கு எதிரான கலாசார அடக்குமுறைகளைக் களைந்திருக்கலாம், மலையக மக்களின் நீண்டகால கொலணி வாழ்வுக்கும் அவர்களின் குறை ஊதியங்களுக்கும் முடிவுகட்டியிருக்கலாம். பொதுக்குரல்கள்தான் எப்போதும் வலியனவாகவும் கவனக்குவிவை ஏற்படுத்த வல்லனவாகவும் இருக்கும். இந்தப் புரிதலை இனியாவது இந்தத் தலைவர்கள் ஏற்படுத்திக்கொள்ளட்டும்.

## நாளொரு நல்வார்த்தை

"நாம் எங்கு சென்றாலும், எங்கிருந்தாலும், எங்கள் செயல்களுக்கான விளைவுகள் நம்மைப் பின்தொடர்கின்றன"

-புத்தர்




# குடும்ப ஆட்சி காரணமாகவே ராஜபக்சக்கள் விரட்டப்பட்டனர்

## அவர்களின் முன்னாள் சகா விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 6

ராஜபக்சக்கள்மீண்டும்2019ஆம்ஆண்டில் ஆட்சிக்கு வந்தபோது குடும்ப ஆட்சியைக் கைவிட்டு அவர்கள் திருந்துவார்கள் என்று நாங்கள் மட்டுமல்ல மக்களும் எதிர்பார்த்தார்கள். ஆனால், அவர்கள் திருந்தவில்லை. அதனால்தான் அவர்களை மக்கள் கூண்டோடு விரட்டியடித்தார்கள்' – இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்

'நீங்கள் ராஜபக்ச குடும்பத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்குப் பாடுபட்டீர்கள். ஆனால், இறுதியில் அவர்களை நீங்கள் வெறுத்தமைக்குக் காரணம் என்ன? அவர்களை மக்கள் விரட்டியடிக்கக் காரணம் என்ன?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போதே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மஹிந்த ராஜபக்ச - கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் இந்த நாட்டில் புலிப் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியவர்கள். அப்படியான தலைவர்களைத் தோல்வியடைந்த தலைவர்களாக வீட்டுக்கு அனுப்பிவைக்க நாம் விரும்பவில்லை. ஆனால், அவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் இறுதியில் எல்லாம் தலைகீழாக மாறின.

மஹிந்த ராஜபக்ச அதிகாரத்தில் இருக்கும்போதே கௌரவமாக ஓய்வு பெறவேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். 2015 ஆம் ஆண்டில்தான் ராஜபக்ச குடும்ப ஆட்சி பற்றிப் பரவலாகப் பேசப்பட்டது. அதனால் அந்தக் குடும்பம் தோல்வியடைந்தது.

மீண்டும் 2019 ஆம் ஆண்டில் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்தபோது அவர்கள் திருந்துவார்கள் என்று நாங்களும் மக்களும் நினைத்தோம். அது நடக்கவில்லை. 2015ஆம் ஆண்டுக்கு முன் ராஜபக்ச குடும்பத்தில் 3 பேர்தான் அமைச்சர்கள். 2019 ஆம் ஆண்டில் 5 பேர் அமைச்சர்கள். குடும்ப ஆட்சியில் அக்கறை செலுத்திய ராஜபக்சக்கள், நாட்டினதும் மக்களினதும் நலன்களில் எந்தக் கவனமும் செலுத்தவில்லை. முன்னர் (2015 இற்கு முன்) போன்றே செயற்பட்டார்கள். இதனால் சீற்றமடைந்த மக்கள், ராஜபக்சக்களைக் கூண்டோடு விரட்டியடித்தார்கள்' - என்றார்.

(ம-22)

நாளை

07.12.2022

புதன்கிழமை

கார்த்திகை 21

சுபநேரம் : 04.47 - 06.17

ராகுகாலம்: 12.17-01.47

சர்வாலய தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 58ஆவது நினைவுதின நிகழ்வு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இடம்பெற்றது. அன்னாரின் உருவச் சிலைக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவுப் பேருரை மற்றும் கூட்டுறவாளர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெற்றன. (ம-17)

*கூட்டுறவுப் பெரியார்*

## வீரசிங்கம் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டோருக்குப் பால்

யாழ்ப்பாணம், டிசெ. 6

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 58ஆவது நினைவு நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு நேற்றுப் பசும்பால் வழங்கப்பட்டது.

கூட்டுறவுப் பெரியாரின் நினைவுதின நிகழ்வு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபையின் மண்டபத்தில் சபையின் உபதலைவர் எஸ்.மகாதேவன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் நூற்றுக் கணக்கான கூட்டுறவாளர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் அனைவருக்கும் ஒரு குவளை பசும்பால் வழங்கப்பட்டது.மேற்கத்தேய பானங்களை அல்லாமல் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் இந்தச் செயற்பாட்டுக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்தனர். (ம-17)



சுழிபுரம் - பறாளாய் நாவலர் சனசமூக நிலைய இளைஞர்களால், வரலாற்றுச் சிறப்பு மிக்க சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் இரு மருங்குகளிலும் மரநடுகை செய்யப்பட்டது. (ம-125)



நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மடுக்கரைப் பகுதியில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் ஐ.எஸ்.ஆர்.சி. தனியார் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் விநியோகத் திட்டம் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் பொதுமக்களின் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது. (ய-60)

## ஆறுமுகநாவலரின் 200ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம்



வவுனியா, டிசெ. 6

சைவப்புலவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200ஆவது பிறந்ததின நிகழ்வு வவுனியா இலுப்பையடிச் சந்தியில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபியில் நகரசபை உப நகரபிதா சு.குமார சாமி தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஆறுமுகநாவலரின் நினைவு தொடர்பான சிறப்புச் சொற்பொழிவை தமிழருவி சிவகுமாரன் நிகழ்த்தினார். தொடர்ந்து மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ய)

## க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

**அண்மையில் வெளிவந்த க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகளில் பாடசாலைகள் ஊடாகக் கிடைத்த பெறுபேறுகளின் விவரம்: -**

**யாழ். இடைக்காடு மகா வித்தியாலயம்**

செ.யதுஷா - 9ஏ, சி.ஆர்நிகன் - 9ஏ, வெ.சரண்ஜா - 9ஏ

**யா/அச்சுவேலி மத்திய கல்லூரி**

சோ.அபிராம் - 8ஏபி, கி.தருஜன் - 8ஏபி, பா.ரிஷ்ஷாந்த் - 7ஏபிசி, வி.மகிராஜ் - 7ஏபிசி, ல.கிருத்திகன் - 6ஏபி2சி, சு.ஆர்த்திகன் - 6ஏ3பி, செ.ஜகிந்தன் - 6ஏ3பி, ர.கேமரூபன் - 6ஏபி2சி, ரா.கிசாளன் - 5ஏ3பிசி, கி.வினுஸ்ரன் - 5ஏ4சி, சு.ஜெயவர்மன் - 4ஏ4சிஎஸ், அ.ஜெரன்ஜிவோசன் - 4ஏ4பிசி, சி.கஜனி - 3ஏ3பி2சிஎஸ், சு.ரசீபன் - 3ஏபி3சி2எஸ், ம.பிரித்திகா -2ஏ5பிசிஎஸ்

**யா/மட்டுவில் கமலாசனி வித்தி**

சி.விஷ்ணுஜன் -9ஏ, ஆ.கஜவேந்தன் - 8ஏபி, க.சஞ்ஜேய் - 5ஏ3பிசி, ச.லதீசன் - 3ஏ3பி3சி, கௌ.அவினயா -3ஏ2பிசி3எஸ், ச.டிலக்ஷனா -2ஏபி3சி3எஸ், க.சஜந்திகா - ஏ3பி4சிஎஸ், ச.டினோஜா - ஏ2பி2சி4எஸ், ச.வினயா - 4பி3சி2எஸ், யோ.சுதர்ஜினி -ஏ5பிசிஎஸ், த.போஜினி - ஏ3பி2சி2எஸ், ம.கம்சவி - 4பி2சி2எஸ், அ.நிலக்சிகா - 4சி 2எஸ்

**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

சி.பார்கவி - 9ஏ, சி.தருண்யா - 9ஏ, கு.தர்மிகா - 9ஏ, ம.சிந்துஜா - 9ஏ, ச.நிருஷனா - 9ஏ, சு.ஜதுர்ஷிகா - 9ஏ, ம.சிந்துஷன் - 9ஏ, பி.கீர்த்திகன் - 9ஏ, ந.கஜீவன் - 8ஏபி, க.யகிதன் - 8ஏபி, ர.மாதினி -8ஏசி, சோ.திவ்வியா - 7ஏ2பி, ப.ஜனுசன் -6ஏ3பி, வி.நிவேதனன் - 6ஏ3பி, சி.கஜலக்ஷன் - 6ஏ2பிசி, செ.மதுஷா - 6ஏ2பிசி, ச.பிரியந்தி - 6ஏ2பிசி, சி.சிவநதி - 6ஏ2பிசி, ம.வாணிதன் - 6ஏபி2சி, உ.தஜிந்தினி - 6ஏபி2சி, ப.டனுஜா - 6ஏபி2சி, சி.சிற்பரன் - 5ஏ3பிசி, ச.யதுஷா - 5ஏ3பிசி, கோ.யனுசிகா - 5ஏ2பி2சி, க.கீர்த்திகா - 5ஏ2பி2சி, சி.அபிசாயினி - 5ஏ2பிசிஎஸ், செ.சங்கவி - 5ஏபி2சிஎஸ், கு.திலக்ஷியா - 5ஏபி2சிஎஸ், த.வேணிலா - 4ஏ5பி, பி.சயந்திகா - 4ஏ4பிசி, ச.பிரியந்தன் - 4ஏ4பிசி, செ.திருசன் -4ஏ3பி2சி, செ.அனோஜிகா - 4ஏ2பி3சி, ஜோ.டெசிக்கா - 4ஏபி4சி, ச.அகநிலா - 3ஏ4பிசிஎஸ், அ.அதீனா - 3ஏ3பி2சிஎஸ், சி.ஜினிஷா - 3ஏ6சி

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு நண்பர்களிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடிமுடியும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கக் கூடும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உற்சாகமானநாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்பு தருவார்.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறு சிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்து விடும். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் சேமிப்பு கரையும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் குளிரூட்டி பாராமரிப்பு, சலவை சேவை செய்வதற்கான கேள்வி கோரல் - 2023

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்வி விபரம் | தகைமை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/DGH KOC/2022/ASA/01 | Maintenance & services of Air Conditioner – 118 Nos | Business Registration & CIDA Registration EM5 or above | 50,000.00 | 22.02.2023 |
| 02 | NP/DGH KOC/2022/LSA/02 | சலவை சேவை | கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்ட தகமைகள் | 50,000.00 | 22.02.2023 |

01. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும் அத்துடன் அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் தரவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமையினை பூர்த்திசெய்தல் வேண்டும்.

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை மாவட்ட வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி . எனும் இடத்திலிருந்து 06.12.2022ம் திகதியிலிருந்து 20.12.2022 வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

03. கேள்விகள் 21.12.2022 ம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகை இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

04. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல0212285329 .0212284111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

05. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப்பெறுகையினை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

06. கேள்வி ஆவணமானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (22.02.2023) வரையும் செல்லுபடியாகும்.

07. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 14.12.2022 திகதி பி.ப 14.30 மணிக்கு, மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி எனும் முகவரியில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர் பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

(CR 38672)(3/6)

# தரம் 5 மாணவர்களுக்கு நாளை இலவச கருத்தரங்கு

வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் நலன் கருதி இலவச கருத்தரங்கு நாளை 7 திகதி திகதி காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை மன்றத் தலைவர் எஸ். மகேந்திரன், பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம். ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (ஒ-இ)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி – 80 ரூபாய் பூச்சுவேலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.

**077 334 1281** (ANE 1569) (3/6)

## பெயர் மாற்றம்

இல. 6A, தெற்கிலுப்பைக்குள வீதி, வெளிக்குளம், வவுனியா எனும் முகவரியில் வசித்துவரும் **கனகரத்தினம் தவ நாயகம்** ஆகிய நான் எனது பெயரை **கனகரெத்தினம் நிரோஷன் தவநாயகம்** என மாற்றிக்கொள்கிறேன் என்பதை இலங்கை சனநாயக குடியரசின் மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**கனகரெத்தினம் நிரோஷன் தவநாயகம்**

## சமையல் ஆள் தேவை

நல்லூர் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சமையல் செய்வதற்கு சமையல் ஆள் தேவை.

- உணவு, தங்குமிட வசதி உண்டு.
- சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

**தொடர்பு: 077 120 9998**

## பணிப்பெண் தேவை

வயதான பெண் ஒருவரை பராமரிக்க (யாழ்ப்பாணத்தில்) பணிப்பெண் தேவை.

- உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
- வயோதிபரை பராமரித்த அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

**தொடர்பு: 075 137 2212**

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 08 . 03 . 1980



மறைவு 04 . 12 . 2022

## அமரர் (திருமதி) ஹேமலதா சிவரூபன்

(நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் தரம்–1 )

மண்ணோடு உன் பூவுடல் மறைந்து விட்டாலும்
நினைவுகள் எங்கள் இதயத்தில் இருந்து
ஒரு போதும் மறைவதில்லை.
உன் பாசமான நினைவுகளை
எம்மிடம் விட்டுச் சென்றீர் ஹேமாவே!!- உன்
ஆத்மா இறையின் பாதங்களில்
சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
**மேல் நீதிமன்ற நீதிபதி, பதிவாளர்,**
**கணக்காளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்**
**மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.**

(CR 38674) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

உதிப்பு 15 . 02 . 1969



உதிர்வு 17 . 11 . 2021

## அமரர் ஐயாத்துரை குணசீலன்

(பிரதி அதிபர் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி,
இராமாவில் மீசாலை வடக்கு கொடிகாமம் )

**திதி : கார்த்திகை மாத பூர்வபக்க சதுர்த்தசி**

அன்போடு வழிகாட்டி
அரவணைத்த தெய்வமே
கண்ணிமைக்கும் பொழுதெல்லாம்
இன்றும் உம் நினைவு எமைச்சூழ
இங்கு எம்மை தவிக்க வைத்து
வானுலகம் நீர்சென்றீர்.
மண்ணுலகில் விடைபெற்று
விண்ணுலகம் நீர்சென்று ஓராண்டு ஆனதுவே
பல்லாண்டு சென்றாலும்
நாம் மறவோம் உம்நினைவுகளை
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**இராமாவில்**
**மீசாலை வடக்கு கொடிகாமம்**

(CR 38672 ) (3/6)

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 02 . 1931



மறைவு 05 . 12 . 2022

## சபாபதிப்பிள்ளை சண்முகலிங்கம்

**(தர்மகர்த்தா - இராஜஇராஜேஸ்வரி தேவஸ்தானம்,**
**முன்னாள் உரிமையாளர்-கோண்டாவில் லிங்கோ லுப்றிக்கேசன் சேவிஸ்)**

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு- ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை சண்முகலிங்கம் அவர்கள் நேற்று (05.12.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரஞ்சோதியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான றோசம்மா, கந்தசாமி மற்றும் தேவசாமி, சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும், சத்தியதேவி, சியாமளாதேவி (பொறுப்பாசிரியை-முத்தமிழ் முன்பள்ளி), மஞ்சுளாதேவி (உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை), நிர்மலாதேவி (ஆசிரியை - நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்), யசோதராதேவி (லண்டன்), சசிதரன் (ஊழியர்- TVS-யசோ மோட்டோர்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னராஜா, பாஸ்கரன், காலஞ்சென்ற உதயகுமார், மற்றும் ஜீவகுமார், மிதுரா ஆகியோரின் மாமனாரும், நிரோஷன், நிலுக்ஷிகா, பிரவீனா, நிலக்ஷனா, பவிசனா, கிஷானா, சதுர்ஜன், கிசோறா, அஸ்வினி, அபிராஜ், அக்ஷதன், அபிரா, விஜயகுமாரி ஆகியோரின் பேரனும், அகிஷான், அபினாஷ் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"இராஜேஸ்வரி வாசா"**
**ஆடியபாதம் வீதி, நல்லூர்.**
**தொடர்பு:077 9912 380**

(CS 22110) 1/6

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 60ஆம் நாள் நினைவஞ்சலி [அந்தியேட்டி]



தோற்றம்: 21.01.1931 மறைவு : 09.10.2022

## அமரர் தாமு வீரசிங்கம்

**(ஓய்வுபெற்ற அதிபர்)**

வையகம் போற்ற வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி
எங்கள் உள்மனதில் நறுமணம் வீசும் புதுமலராய்
என்றும் பூத்திருக்கும் அழகிய திருவுருவே,
கஞ்சத்தனம் எதுவுமின்றி
அளவிலா அன்பை அள்ளி வழங்கிய வள்ளலே!

நற்பண்பு மிகு மகவாய், பொறுப்பு மிகு சகோதரனாய்,
மதிப்பார்ந்த ஆசிரியராய், அதிபராய்,
அன்பான கணவனாய், பண்பான தந்தையாய்,
கண்ணியமான சமூக சேவகனாய், பக்திமிக்க அடியவனாய்
பாத்திரங்கள் பல ஏற்று - இவ்வுலக வாழ்வில்
நிறைவான வாழ்வை மகிழ்வோடு வாழ்ந்தவர் நீங்கள்!

உயர்குணமேவிய திருவுருவாய் எமக்கு வழிகாட்டி
நிலவொளியாய் என்றும் எமைக் குளிர்வித்து
எம் வாழ்வின் உயர்விற்காய் வந்துதித்த விடிவெள்ளி
நீறாகிப் போனாலும் நீங்களே எங்கள் திசைகாட்டி
மாறாத அன்புடன் உங்கள் பாதமதில்
மலர்தூவி வணங்குகின்றோம்.

**"கௌரிகோட்டம்"**
**அல்வாய்.**
**0777 351803**

நீங்கா வலிகளுடன்
**குடும்பத்தினர்.**

## மீட்டல் பயிற்சி கருத்தமர்வு

சாவகச்சேரி, டிசெ. 6

தென்மராட்சிப் பிரதேசத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மீட்டல் பயிற்சிக் கருத்தமர்வும் பரீட்சைக்கு ஆயத்தப் படுத்தல் செயற்பாடும் தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தித் திணைக்கள சமூக அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தமர்வில் சமுர்த்தி பெறும் குடும்பங்கள் மற்றும் பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த 120 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(ம-14-9)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இராஜேந்திரா



**தோற்றம்** 10.08.1946 **மறைவு** 05.12.2022

யாழ், தாவடியை பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராஜேந்திரா அவர்கள் நேற்று (05.12.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசநாயகம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விஜயகுமாரி அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கிரிதரன் மற்றும் கிருசாந்தி, சக்திதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகரனின் அன்பு மாமனாரும், அபிலாஸ், நிகிஷா அவர்களின் அன்புப் பேரனும், மல்லிகா, சுபாசினி, சுபோதினி மற்றும் காலஞ்சென்ற மகேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரி, கதிர்வேற்பிள்ளை, ராஜ், கதிர்காமநாதன், விமலாதேவி, சற்குணநாதன், சிவகுமாரி, உத்தமநாதன், அகிலன் மற்றும் காலஞ்சென்றவர்களான மகாரூபன், சோதிநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"விமலஸ்தான்"**
**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**சக்திதரன் (மகன்)**
**0768706711**

(CS 22110) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - தெல்லிப்பளை

விண்ணப்பதாரர் – கந்தப்பு சுதாகரன் பெண் கேதீஸ்வரி
முகவரி – 82/4 மூத்தான்கலட்டி, சாயுடை, மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பளை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09 அரசடி வீதியில் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறையுமான எழுவாலைக் கலட்டியும் மூத்தான் கலட்டியும் நிலப்பரப்பு 04பரப்பு குழி 15.75 கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் பெயர் பதிவில் இல்லை.
குறித்த ஆதனமானது 2016ஆம் ஆண்டு யூலை மாதம் 14. பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.லிங்கா துரைராஜா முகதாவில் 10285ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி நடராசா யோகானந்தமும் பெண் பத்மினி யோகானந்தம் ஆகியோர் கந்தப்பு சுதாகரன் பெண் கேதீஸ்வரி அறுதியளித்துள்ளனர். குறித்த உறுதியின் தாய் உறுதி 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் 1479ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி குலசிங்கம் சிவநாதன் பெண் தங்கராணி என்பவரால் அவரின் தாய்வழியாக வந்த முதுசமென குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்.**
வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பளை தெல்லிப்பளை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறையுமான "எழுவாலைக் கலட்டியும் மூத்தான் கலட்டியும்" நிலப்பரப்பு 04பரப்பு குழி 15.75 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்கள் வரைந்த 3680/20.03.2014ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு 01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

**துண்டு 01**
கிழக்கு - 12அடி அகலப்பாதை
வடக்கு - தம்பித்துரை பாலச்சந்திரன் பெண் சரஸ்வதி
மேற்கு - சின்னத்தம்பி ஜெயரூபனினதும் கார்த்திகேசு சோதிலிங்கத்தினதும் ஆதனங்கள்
தெற்கு - இராசையா புவனேஸ்வரியின் ஆதனம். இதடங்கலும் கிழக்கேயுள்ள 12 அடி அகலப் பொதுப்பாதையில் இதற்குரிய பங்கும்

மேற்குறித்த ஆதனத்தை கந்தப்பு சுதாகரன் பெண் கேதீஸ்வரி எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

---

சைவ மன்றம் | The Saiva Manram
சிட்னி முருகன் கோயில் | Sydney Murugan Temple
தமிழ் கல்வி கலாச்சார நிலையம் | Tamil Educational & Cultural Centre

## அவுஸ்திரேலியாவில், சைவமன்றத்தில் வேலை வாய்ப்பு
## மடப்பள்ளி ஐயர் / உதவி அர்ச்சகர்

**(நைவேத்தியம், பிரசாதம் செய்தல் மற்றும் கோயிற்பணி புரிதல்)**

அவுஸ்திரேலியாவில், சைவமன்றத்தினால் நிர்வகிக்கப்படும் சிட்னி முருகன் கோயிலில், பிரதானமாக மடப்பள்ளி ஐயராகவும் ஏனய நேரத்தில் உதவி அர்ச்சகராகவும் பணி செய்வதற்கு ஓர் ஐயரை நியமிப் பதற்கு மன்றம் தீர்மானித்துள்ளது

தேர்ந்தெடுக்கப்படுபவர். சுவாமிக்குரிய நைவேத்தியமும் அடியார்கள் பூசையில் படைப்பதற்குக் கேட்கும் பிரசாதங்களையும் செய்தல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட நேரங்களில் கோயிலில் உதவி அர்ச்சகராகவும் பணியாற்ற வேண்டும். தொடக்கத்தில் இரு வருடாங்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை வழங்கப்படும்.

**தகுதி :**
- ஏற்கனவே பிரசாதங்கள் கோயிலில் செய்த அனுபவம். (பொங்கல். புளிச்சாதம். வடை. மோதகம் முதலியன)
- உதவி அர்ச்சகராக பணியாற்றுவதற்கு பயிற்சி பெற்றிருத்தல்.
- உதவி அர்ச்சகராக பணியாற்றிய அனுபவம்.
- லட்டு போன்ற இனிப்புகள் செய்த அனுபவம் விரும்பத்தக்கது.
- பூமாலை கட்டுவதற்குத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

**விண்ணப்ப நிறைவு நாள்: 30.12.2022.**
**விண்ணப்பம் அனுப்புவதற்குரிய விபரம்:**

**த. ஞானரட்ணம்**
**சைவமன்ற செயலாளர்**
**Email: Secretary@sydneymurugan.org.au**
**மேலதிக விபரங்களுக்கு:**
**ச.சபானந்தன் +61 405 147 679**
(CS 47981) (3/6)


---

## இலவச யோகாக்கலை வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் - உரும்பிராய் திருமூலர் யோகா அறச்சாலையின் ஏற்பாட்டில், யாழ். யோகா வித்யா பீடத்தின் அனுசர ணையில் இலவச யோகாக்கலை வகுப் புக்கள் வாரம் தோறும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 4.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை இடம்பெற்று வருகின்றன. இலவச யோகாக் கலை வகுப்புக்களில் பயில விரும்பும் நபர்கள் இணைந்துகொண்டு பயன்பெற முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ள னர். (ம-14)

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம்

அமரர்
**கதிரவேலு நாகராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று **(06.12.2022)** **செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியாபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**077 9352 462**

**பழைய வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 04 . 1939



இறப்பு
04 . 12 . 2022

## திருமதி பத்மாவதி சேதுகாவலர்

கரும்பனையைப் பிறப்பிடமாகவும் 174/11A, கோவில் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சேதுகாவலர் கடந்த (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம் சேதுகாவலரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகரட்ணம் மாமாங்கம் தம்பதியினரின் அன்பு மகளும், சற்குணதேவி. காலஞ்சென்றவர்களான சுகுணாதேவி, சிவபாலன், சிவபாஸ்கரன், சிவநாதன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுனிதா (லண்டன்), பகீரதி, (மு.சே.அ. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு), சுதர்சினி (உதவி அதிபர், யா/ திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாட சாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரஞ்சிதசெல்வம் (இலண்டன்), கவிவாணன் (Finacial Consultant. இலங்கை, காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - கொழும்பு) மகிழ்னன் (ஆசிரியர், யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாட-சாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவானுஷா, சுவஷ்திகன், டிவேஷ்திகன், ஹர்சித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**174/11A, கோவில் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
(CS 47841) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை பிரதேசசபையினது பட்ஜெட் ஏகமனதாக நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 6

பருத்தித்துறை பிரதேசசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நேற்று நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை பிரதேசசபையின் வரவு - செலவுத் திட்டக் கூட்டம் பிரதேசசபை மண்டபத்தில் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 3 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஓர் உறுப்பினருமாக 20 உறுப்பினர்களும் வரவு - செலவுத் திட்டத்துக்குத் தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்தனர். அதனையடுத்து வரவு - செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்படாமல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(ம-14)

# பருத்தித்துறை நகரசபையின் பட்ஜெட் நேற்றுத் தோற்கடிப்பு

## கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் 'பல்டி'

யாழ்ப்பாணம், டிசெ. 6

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை நகரசபையின் வரவு – செலவுத் திட்டம் ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டது.**

பருத்தித்துறை நகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டக் கூட்டம், நகரசபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் ஜோ. இருதயராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது வரவு-செலவுத் திட்டம் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்த நிலையில் நகரசபை செயலாளரால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகரசபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 6 பேரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவருமாக 8 பேர் வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 4 பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவரும், சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவருமாக 7 பேர் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதன் அடிப்படையில் வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தனக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மீளத் திருத்திய வரவு - செலவுத் திட்டம் கொண்டுவரப்படும் என்று பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் தெரிவித்தார்.

(ம-14-22)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மனம் மகிழ 19.11.1933

மனம் நெகிழ 06.12.2022

## திருமதி சுப்பையா சிவபாக்கியம்

தாயிற் சிறந்த கோவிலுமில்லை தரணியிலே என்பர் எமதுமுந்தையோர். ஆம்! எமது இல்லத்தரசியே எங்கள் அம்மாவே! சிவபாக்கியமே! தாய் தந்தையருக்கு பதினொரு சகோதர, சகோதரிகளுடன் மூத்த மகளாய் பிறந்து எம் எண்மரையும் பெற்றெடுத்து ஆற்றலற எமை வளர்த்து ஆளாக்கி ஏற்றம் பல கண்டு புன்னகை பூத்திருந்த எமது அன்புத் தெய்வமே! தங்களை காலனவன் கவர்ந்து சென்று தினங்கள் 31 கழிந்தனவே! துயர் சுமக்கும் இதயத்துடன் விழிநீர் சொரிகின்றோம் தாயே! உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இல.03, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திருமதி சிவபாக்கியம் சுப்பையா அவர்களின் வீட்டுக் கிரியை நிகழ்வுகள் இன்று (06.12.2022) முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 03, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

தொ.பேசி இலக்கம் : 077 484 8932

(CS 47963)(3/6)



# அந்தியேட்டி சபீண்டீகரண, ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



பிறப்பு 10 . 08 . 1948

மறைவு 07 . 11 . 2022

கடந்த 07.11.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் திரு. பொன்னர் பேரின்பநாதன்

(ஓய்வுநிலை கணித பாட ஆசிரிய ஆலோசகர் – யாழ். கல்வி வலயம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய சபீண்டீ கரண நிகழ்வானது இன்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் மதியபோசன நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் **பருத்தித்துறை வீதி, கோப்பாய் சந்தி, கோப்பாய் என்னும் முகவரியில் உள்ள "புஸ்பமகால்" மண்டபத்தில் நடைபெறும்** அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தியினை அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு, மரண நிகழ்விற்கு துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் என்பவற்றின் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், அஞ்சலி உரை ஆற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பரமேஸ்வரி அம்பாள் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(CS 22103) (3/6)

குடும்பத்தினர்
077 004 0829


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# என் நினைவுத்திரையில் பேராசிரியர் கைலாசபதி

**பேராசிரியர் கைலாசபதியின் 40ஆவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும். இதைமுன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமான எஸ்.சிவலிங்கராஜாவின் அனுபவப்பகிர்வு இங்கே பிரசுரமாகின்றது.**

பேராசிரியர் கைலாசபதி காலமாகி 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1933ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி கோலாலம்பூரில் பிறந்த கைலாசபதி 1982ஆம் ஆண்டு டிசெம்பர் 6ஆம் திகதி தனது நாற்பத்தொன்பதாவது வயதிலே கொழும்பில் காலமானார். தமிழ்மொழிக்கு அழியாத வாழ்வும் வளமும் கொடுத்த மகாகவி பாரதி, புதுமைப்பித்தன் முதலானோர் பயணித்த பாதையிலேயே கைலாசபதியின் காலமும் பயணித்தது. கைலாசபதியின் வாழ்வுக் குறிப்புக்கள் சிலவற்றை என் நினைவுத் திரையிலிருந்து மீட்டதன்பின் காட்சியையும் கருத்தையும் தொடரலாம் என்று எண்ணுகின்றேன்.

ஆரம்பக்கல்வியைக் கோலாலம்பூரிலே பெற்ற இவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே இடைநிலைக் கல்வியைப் பெற்றார். கார்த்திகேயன் முதலான ஆசிரியர்களும் முருகையன் முதலான நண்பர்களும் இந்துக் கல்லூரியிலே இவருக்கு வாய்த்தனர். பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலே கற்று 1953ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் சென்றார். பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று 1957ஆம் ஆண்டு முதற்தரத்தில் சித்தியெய்தினார். 1961ஆம் ஆண்டில் பல்கலைக்கழக விரிவுரையாளராக இணையும்வரை தினகரன் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதி தினகரன் பத்திரிகையின் பொற்காலம் என்று சொல்லுவார்கள். இயல்பாகவே திறமைசாலிகளை இனங்கண்டு தூக்கிவிடும் ஆற்றல் கைவரப்பெற்ற கைலாசபதி ஈழத்தின் சிறந்த எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தினகரனிலே களம் அமைத்துக்கொடுத்தார். அவரது ஆற்றலும் ஆளுமையும் தினகரனை வளர்க்க உதவியது.

1963ஆம் ஆண்டில் பர்மிங்காம் பல்கலைக்கழகம் சென்று தமிழ்வீரயுகக் கவிதைகள் பற்றி ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டம் பெற்றுத் திரும்பினார். இவரின் தமிழ்வீரயுகக் கவிதைகள் என்னும் ஆய்வேடு, ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தினால் நூலாக வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், வித்தியாலங்காரப் பல்கலைக்கழகம் என்பவற்றிலே பணியாற்றி 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

### யாழ். பல்கலையில் ஆளுமைமிக்க பணி

குறைந்த வளங்களுடன் தொடங்கிய பல்கலைக்கழக வளாகத்தைக் கட்டியெழுப்புவதில் இரவுபகல் பாராது அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். தலைவர் என்ற வகையிலே ஆக்கபூர்வமன பல பணிகளை இவர் முன்னெடுத்தார். உயர்ந்த நிலையிலே ஆய்வுகளை முன்னெடுத்தல், சிறந்த முறையிலே விரிவுரைகளை நிகழ்த்துவித்தல், பௌதிக வளங்களை அதிகரித்தல் முதலான பலவற்றிலே இவர் அதிக கவனம் செலுத்தினார். மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற குறள்வழி நின்று பல்கலைக்கழக வளாகத்தை வளர்க்க வேண்டுமென்ற கருத்துநிலை இவரிடம் நிரம்ப இருந்தது. தமிழ் ஆய்வைத் தமிழியல் ஆய்வாக வளர்த்து நிலைபெறச் செய்த முன்னோடிகளுள் ஒருவராகக் கைலாசபதி திகழ்ந்தார். தான் வரித்துக்கொண்ட மாக்சியச் சிந்தனைப் பின்புலத்தில் தமிழியல் ஆய்விலே தடம்பதித்தார். ஒப்பியல் இலக்கிய ஆய்வு, திறனாய்வு, நவீன தமிழ் இலக்கிய ஆய்வு, பழந்தமிழ் இலக்கிய ஆய்வு, ஈழத்து இலக்கிய ஆய்வு முதலான பலதுறைகளிலே பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி உலக அரங்கில் நின்றுநிலைக்கும் தமிழியல் ஆய்வாளராகத் திகழ்ந்தார். ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிச் செம்மையான நூலொன்றை எழுதவேண்டும் என்ற எண்ணம் இவரிடம் இருந்ததை நான் அறிவேன். கைலாசபதி மறைந்த பின் அவரைப்பற்றி நூல்கள், ஆய்வுகள், மலர்கள், ஆய்வேடுகள் எனப்பல வெளிவந்துள்ளன. இந்தளவிலே கைலாசபதி பற்றிய அறிமுகத்தை நிறைவுசெய்து காட்சியும் கருத்தும் என்னும் பகுதிக்குக் காலடி வைப்போம்.

1959 அல்லது 60 என்று நினைக்கின்றேன். கரவெட்டி வாணி கலைக்கழகத்திலே பண்டிதர் க.வீரகத்தி தொல்காப்பியருக்கு மூன்று நாள்கள் விழா எடுத்தார். நான் அப்பொழுது பள்ளி மாணவன். பேச்சுக்கள், பிரசங்கங்கள், பட்டிமன்றம், கவியரங்கு முதலியவற்றைக் கேட்பதில் அதிபிரியத்தோடு இருந்த காலம். ஒருநாள் விழாவுக்குப் பிரதமவிருந்தினராகத் தினகரன் பிரதம ஆசிரியர் க.கைலாசபதி வந்திருந்தார். வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல், நல்ல உயரம், ஆஜானபாகுவான அவர் எழுந்து பேசத்தொடங்கினார். பேச்சு முழுவதும் விளங்கக்கூடிய பக்குவம் அப்போது எனக்கு இல்லை. எல்லோரும் அமைதியாக இருந்து செவிமடுத்ததை மட்டும் கண்டேன். கைலாசபதியை நான் தரிசித்த அந்த முதற்காட்சி அரைநூற்றாண்டுக்கு மேலாகியும் என் உள்ளக் கிழியில் இன்றும் உயிரோவியமாய் இருக்கிறது.

1976ஆம் ஆண்டு காலை யாழ்ப்பண வளாகத்துள் காலடி வைக்கிறேன். யாழ். வளாகத்தின் இரண்டாவது அணி மாணவன் நான். 1975ஆம் ஆண்டு மாணவர்களும் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து உள்வாங்கப்பட்ட மாணவர்களும் கம்பீரமாக உலாவருகிறார்கள். அவர்கள் தாம் சிரேஷ்ட மாணவர்கள் என்ற அதிகாரத்தையும் காட்டத் தவறவில்லை. புதிய மாணவர்களுக்கான கூட்டம் ஆரம்பமானது. சிங்கள, தமிழ் விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக நடைமுறை பற்றி ஆங்கிலத்திலே உரையாற்றுகிறார்கள். வளாகத் தலைவர் முதலிலே ஆங்கிலத்தில் உரையாற்றுகிறார். பின் தமிழிலேயும் உரையாற்றுகின்றார். சிங்கள, இஸ்லாமிய, தமிழ் மாணவர்களால் இராமநாதன் மண்டபம் நிரம்பியிருந்தது. கைலாசபதியின் உரையைக் கேட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இது. இவரிடம் படிக்கவேண்டும் என்ற எண்ணம் அன்றே எனக்கு உண்டானது.

நான் பல்கலைக்கழகம் வருவதற்கு முன்னரே இவரது கட்டுரைகள் சிலவற்றையும் இவரைப்பற்றிய பல கட்டுரைகளையும், சிறு நூல்களையும் படித்திருக்கிறேன். அக்காலத்திலே நான் இரசித்துப் படிக்கும் எழுத்தாளரில் ஒருவரான எஸ்.பொ. இவரைப்பற்றித் தாறுமாறாய் எழுதியவை எல்லாம் எனக்கு அத்துப்படி. முதலாம் ஆண்டிலே ஒருசில அதிதி விரிவுரைகள் எடுத்தார். இரண்டாம் ஆண்டு, தமிழ் சிறப்பு ஆரம்ப வகுப்பு. ஐந்து பெண் பிள்ளைகள், நான் ஒருவன் மட்டும் ஆண். தமிழ் சிறப்பு வகுப்புக்கு அவர் முதல்நாள் வந்து வகுப்பெடுத்தமை நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னும் இன்றும் பசுமையாக நினைவிருக்கிறது. வகுப்புக்கு வந்த முதல்நாள் மாணவர்களைப் பார்த்து நீங்கள் என்னென்ன நூல்கள் வாசிக்கிறீர்கள் என்று ஒவ்வொருவரையும் கேட்கிறார். என்முறை வந்தது. மற்ற மாணவிகள் அவ்வளவு பெரிதாக ஒன்றும் சொல்லவில்லை. நான் சற்றுத் துணிவாக டாக்டர். மு.வ., நா.பார்த்தசாரதி, அகிலன், காண்டேகரின் கா.ஸ்ரீ.ஸ்ரீ மொழிபெயர்ப்பு நாவல்கள் என்று வரிசையாகக் கூறினேன், நல்லது. பொன். நீலனை வாசித்திருக்கிறீரா? அசோகமித்திரனை வாசித்திருக்கிறீரா? தாய், மொழிபெயர்ப்பு நாவல் வாசித்திருக்கிறீரா? என்று [illegible] டிக்கொண்டே கூறினேன்.

'அவற்றையும் வாசியும்' என்று கூறிவிட்டு பழைய இலக்கியங்களிலே எவற்றிலே உமக்கு விருப்பம் என்று கேட்டார். இராமாயணம், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா என்று கூறினேன். பாரதியைப் படித்திருக்கிறீரா? ஏன்று கேட்டார். ஓம்! பலதடவை படித்திருக்கிறேன், நல்லது. கண்ணாடியை ஒருதடவை உயர்த்தி என்னைப் பார்த்துவிட்டு, சரி, இனிப் படிப்போம் எனத் தொடங்கினார். ஒருவகையில் இது எனக்கு நிகழ்ந்த ஒரு நேர்முகப் பரீட்சையாகவே இருந்தது.
பாடநேர அட்டவணைப்படியும் பாடத்திட்டப்படியும் வகுப்புக்கள் நடைபெற்றன. பலர் கற்பித்தார்கள். அவர்களைப் பற்றிப் பிறிதோர் இடத்திலே விரிவாகக் குறிப்பிடுவோம்.

கைலாசபதியைத் திறனாய்வாளராக, மாக்சிய விமர்சகராக, முற்போக்குச் சிந்தனையாளராக, சமூகவியல், மானுடவியல் ஆய்வாளராக, பத்திராதிபராக, பழந்தமிழ் இலக்கிய ஆய்வாளராக, நிர்வாகியாக எனப் பல்வேறு கோணங்களிலே அவரது பணியைப் பற்றிப் பலர் ஆய்வுசெய்திருக்கிறார்கள். எனவே, அவற்றை விடுத்து அவரின் விரிவுரைச் சிறப்பையும், விரிவுரைப் பாணியையும் அவரும் நானும் பழகியதையும் இங்கே பதிவுசெய்கின்றேன்.

(நாளை புதன்பொய்கையில் தொடரும்...)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

அமரர் நவரட்ணம் கனகம்மா



தோற்றம் 22.04.1940 — மறைவு 06.11.2022

அன்னாரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்
62, சிவன் புதுவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ் சேவையின் எண்ணிக்கை குறைகிறது

கொழும்பு, டிசெ. 6

தனியார் பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் நாளாந்த வருமானம் குறைவடைந்துள்ளது. எனவே வார இறுதி மற்றும் பொது விடுமுறை நாள்களில் பேருந்துச் சேவைகளைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;

தனியார் பேருந்துச் சேவைகளை 50 சதவீதமாகக் குறைக்கத் தீர்மானித்துள்ளோம். வாரத்தில் குறிப்பிட்ட சில நேரங்களில் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. இது தவிர சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாள்களில் பேருந்துகளில் பயணிப்பவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விலையேற்றம் காரணமாக, தினசரி வருமானத்தில் 35 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை எரிபொருளுக்காகச் செலவிடப்படுகிறது. இவை அனைத்தையும் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம)

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்;

# 1,753 குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீடு!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 6

இழப்பீட்டுப் பணியகம் ஊடாக ஆயிரத்து 753 குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமற் போனோர் அலுவலகத்தின் பணிகளை வேகமாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதிப்படுத்தப்பட்ட ஆயிரத்து 653 ஆவணங்கள் இதுவரை எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன், இழப்பீடு தொடர்பான விசாரணைகளின் பிரகாரம் ஆயிரத்து 753 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. 3 ஆயிரத்து 320 ஆவணங்களுக்கு (குடும்பங்களுக்கு) இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல 5 ஆயிரத்து 246 ஆவணங்கள் எஞ்சியுள்ளன.

இந்தியாவில் இருந்து 11 ஆயிரத்து 780 பேர் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர். இவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே போல போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தமாக 9 மாகாணங்களிலும் செயலணி உருவாக்கப்படும். இதன் முதற்கட்டமாக வடக்கில் ஆளுநர் தலைமையில் செயலணி நிறுவப்பட்டுள்ளது' - என்றார். (ம-44)

# போக்குவரத்துச் சபை தலைவர் பதவி நீக்கம்

கொழும்பு, டிசெ. 6

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அந்தப் பதவியை இராஜினாமாச் செய்யுமாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவுறுத்தியுள்ளார். (அ-ஒ-இ)

# வேட்டைப் பொருள்கள் கிளிநொச்சியில் மீட்பு

## இருவர் கைது

கிளிநொச்சி, டிசெ. 6

கிளிநொச்சி மாவட்ட வனஉயிரிகள் திணைக்களத்தினரால் துப்பாக்கிகள், வாள்கள், காட்டுப்பன்றி இறைச்சி என்பனவற்றுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி-முறிப்புப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 3 உள்ளூர்த் துப்பாக்கிகள், 3 வாள்கள், ஏகே- 47 துப்பாக்கியின் 200 தோட்டாக்கள், 7 கிலோ ஈயம், 3 கிலோ காட்டுப்பன்றி இறைச்சி என்பனபவற்றுடன் 2 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-113)

போதைப்பொருள் கலாசாரம்

# மறுவாழ்வு பெற்றுக்கொள்வதற்கு ஆளுநர் செயலகத்தை நாடவும்!

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

வடமாகாணத்தில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், போதைப்பொருளில் இருந்து மீண்டு மறுவாழ்வு பெறுவதற்காக ஆளுநர் அலுவலகத்தை அணுகமுடியும் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். அண்மையில் யாழ். சிறைச்சாலையில் போதைப்பொருள் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களை நேரடியாகச் சென்று கலந்துரையாடினேன். போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை இனங்கண்டு மறுவாழ்வு அளிக்கும் செயற்றிட்டத்துக்கு பெற்றோர் அல்லது குடும்ப உறுப்பினர்களின் உதவிகள் தேவைப்படுகின்றன.

எனவே போதைக்கு அடிமையான எந்தவொரு நபரும் உடனடியாக ஆளுநர் அலுவலகத்தை அணுகலாம். வடமாகாணத்தில் போதைப்பொருள் விற்பனையாளர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட நபர்களை மனிதாபிமான ரீதியில் அணுகுவதற்கு ஆளுநர் செயலகம் தயாராக இருக்கின்றது - என்றார். (ம-14-20)

# 2ஆவது கட்டமாக மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ். குடாநாட்டிலும் வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் பொதுமக்களுக்கு இரண்டாம் கட்டமாக மண்ணெண்ணெய் வழங்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் மற்றும் மீனவர்களைத் தொடர்ந்து குடும்ப அட்டைக்கு தலா 3 லீற்றர் வீதம் பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கும் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டமாக மண்ணெண்ணெய் வழங்கும் பணிகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம)


**பெயர் மாற்றம்**

17/20, நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் வசித்துவரும்
**நிக்சன் பிறடி லப்பன் (781265250V)**
ஆகிய நான் எனது பெயரை **நிக்ஷன் பிறடி லப்பன்** என மாற்றிக்கொள்கிறேன்
என்பதை இலங்கை சனநாயக குடியரசின்
மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

நிக்ஷன் பிறடி லப்பன்


# முதியவரை அழைத்துச் செல்ல மருத்துவமனை வேண்டுகோள்

சாவகச்சேரி, டிசெ. 6

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் அநாதரவான நிலையில் முதியவர் ஒருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த முதியவர் வாய்பேச முடியாத நிலையில் உள்ளதால் அவரை அடையாளம் காண முடியாதுள்ளது என்று தெரிவித்த மருத்துவமனை நிர்வாகம், அவரைத் தெரிந்தவர்கள் அடையாளம் காட்டி அழைத்துச் செல்லலாம் என்று அறிவித்துள்ளது.

சுகதேகியாகக் காணப்படும் இவரை உறவினர்கள் அழைத்துச் செல்லத் தவறின், தென்மராட்சி பிரதேச செயலகம் ஊடாக கைதடி முதியோர் இல்லத்தில் இணைத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)


**மரண அறிவித்தல்**

தோற்றம் 09.12.1982 — **லோகராசா பிரதீபன்** — மறைவு 05.12.2022



ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் இந்துபுரம் திருமுறிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட லோகராசா பிரதீபன் நேற்று (05.12.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் லோகராசா- லீலாதேவி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் புஸ்பராணி தம்பதியரின் மருமகனும், தீபாவின் அன்புக் கணவரும், டருஜா, றிஸ்மிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மோகன்ராஜ் மற்றும் தர்சிகா - சுதாகரன், தனுஷா-கஜேந்திரன், சாமிலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராமலிங்கம்- அன்னபாக்கியம், நடராசபிள்ளை- மகேஸ்வரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் இந்துபுரம் திருமுறிகண்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்நகர் வடக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு.

தகவல் : குடும்பத்தினர்.
077 1623998

(CS 22115) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநரின் வர்த்தமானி இரத்துச்செய்ய ரணில் பணிப்பு

கொழும்பு, டிசெ. 6
வடக்கு மாகாண ஆளுநரால் வெளியிட்ட நியதிச் சட்ட வர்த்தமானியை இரத்துச் செய்யுமாறு நீதியமைச்சருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடந்த ஒக்ரோபர் மாதம்இரு நியதிச் சட்டங்களை தன்னிச்சையாக உருவாக்கி அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்திருந்தார். இதனைத் தவறு என்று வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஆளுநரின் மேற்படி நடவடிக்கை சட்ட முரணானது என்று சுட்டிக்காட்டி கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. ஆளுநரால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சருக்கு ஜனாதிபதி பணித்துள்ளார். (ஒ.5)

# ம.எண்ணெய் இன்மை: பெண்ணுக்கு காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 6
பிளாஸ்ரிக் சோடா போத்தலில் தீமூட்டி அடுப்பு எரிக்க முயன்ற 30 வயதுடைய குடும்பப் பெண் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

பளை, இந்திராபுரத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக, சமையலுக்கு அடுப்பை எரிப்பதற்காக பிளாஸ்ரிக் சோடா போத்தலை தீமூட்டிய வேளையில் பிளாஸ்ரிக் உருகி கையில் பட்டதாலேயே இந்த எரிகாயம் ஏற்பட்டது.

காயமுற்றவர் பளை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். (அ-ஒ-9)

*ஈஸ்டர் தாக்குதல்:*

# தனிப்பட்ட ரீதியில் நான் பொறுப்பல்ல

## நீதிமன்றில் மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 6
2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல்களை தடுக்காமைக்கான பொறுப்பை தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தாம் தற்போது நாட்டின் ஜனாதிபதியாக இல்லாத காரணத்தால் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கெதிராக இல்லாமல், அரசாங்கத்துக்கு எதிராக வழக்கை தொடர்ந்து இழப்பீட்டைக் கோர வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் பிரதிவாதி பட்டியலிலிருந்து தம்மை நீக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவினால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### கடந்தகால...

தமிழ் மக்களுக்கு பேச்சு மூலமான தீர்வு என்பது மாயக்காற்றாக மாறிக்கொண்டிருக்கும் கனவு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்திய ஆங்கில ஊடகத்துக்கு தெரிவித்திருந்தார். நல்லாட்சி அரசின் காலத்தில் தமிழ் தரப்பின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியிலும், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் முழுமையாக நம்பி ஈடுபட்ட ஒருவர் இவ்வாறான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியுள்ள சூழலில், உங்களின் தீர்வு முயற்சி எவ்வாறு முன்நகரப்போகின்றது என்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

'இலங்கையின் தேசிய பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காண நாம் தயாராகவுள்ளோம். அதற்கான முதற் கட்டமாக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் விரைவில் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளோம். இதில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் பங்கேற்கவேண்டும் என நாம் விரும்புகின்றோம். கடந்த கால மனக்கசப்பான விடயங்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு இருப்பதால் காலம்தான் வீண்விரயமாகும். தேசியப்பிரச்சினையை உள்ளகப் பிரச்சினையை நாம் அனைவரும் ஒன்றுகூடி பேசித் தீர்வைக்காண வேண்டும். இந்த நிலையில், வெளியகத் தலையீடுகள் எதற்கு? தீர்வில் நாம் நம்பிக்கை வைத்துச் செயற்படவேண்டும் என்று தமிழ்த் தலைவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்' - என்றார். (அ-ஒ-5-22)

### சொகுசுப்...

குள்ளானதில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4.45 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இவ்வாறானதோர் விபத்து கடந்த மாதம் இடம்பெற்று 3 பேர் உயிரிழந்திருந்த நிலையில், ஒரு மாதகாலத்தினுள் மற்றுமொரு விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சொகுசுப் பேருந்து, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி, இரணைமடு சந்திக்கருகில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. பயணித்தவர்களில் 22 பேர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ஒ-214)

### சான்றுப்பொருளான...

வெளியே வைத்து விற்கப்படுகின்றன- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச பொலிஸாரின் பொட்டுக்கேடுகளை நாடாளுமன்றத்தில் அம்பலப் படுத்தினார்.

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு மற்றும் நீதி, சிறைச்சாலை விவகாரம், அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கான பாதீட்டு ஒதுக்கீடு தொடர்பான நேற்றைய குழுநிலை விவாத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது, 5 இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

பொலிஸாரால்கைப்பற்றப்படும்போதைப் பொருள்கள், வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே மீண்டும் சந்தைக்கு வருகின்றன.

கைப்பற்றிய போதைப்பொருள்களை மக்களுக்கு விற்ற பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தினருக்கு எதிராக கடந்த காலங்களில் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, குறித்த பொருளை கைப்பற்றியவுடன் விசாரணைக்குத் தேவையான அளவை மாத்திரம் வைத்துக்கொண்டு, மிகுதியை அழிப்பதற்கு சட்டத்திருத்தம் ஊடாக நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ஒ-இ)

### வியாழக்கிழமை...

பகுதியில் கடும் மழைக்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை முன்னறிவிப்பில் எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்தக் காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 200 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு கிடைக்க வேண்டிய பருவமழை கடந்த 20 நாள்களுக்கு மேலாக உயரமுத்தம், பனிக்குளிரலை ஆகியவற்றால் தள்ளிப்போனது. ஆயினும் பனி மெ[illegible] ரமுத்தமாக ஒ[illegible] கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் தென்சீனக்கடலின் ஊடாக வங்கக்கடலில் இறங்கியிருக்கும் தாழ்வு நிலையானது புயலாக மாறி நாளைமறுதினம் வியாழக்கிழமை வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தை அண்மித்து வந்து தமிழகத்தின் நாகப்பட்டினம் சென்னையை நோக்கிச் செல்லும்.

அவ்வாறு பயணிக்கும்போது தரையைக் கடக்க முன்னர் புறக்காரணிகளால் நலிந்த புயலாக மெதுவாக செயலிழக்கும். கடல் பகுதிகளிலேயே காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்று வானிலை அறிக்கையில் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

### வடக்கு மாகாண...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்குக் கல்வித்துறை சீர்கேடுகள் தொடர்பில் 100 பக்க முறைப்பாடு எம்மால் ஆளுநருக்கு வழங்கப்பட்டது. அதற்கு அமைவாக விசாரணைக்குழுவும் அமைக்கப்பட்டது. ஆனால், விசாரணை அறிக்கை இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

மேலும், மூன்றாம் தவணை ஆரம்பித்த போதும் இரண்டாம் தவணைப் பரீட்சையை வைக்கமுடியாத அளவுக்கு வடமாகாணக் கல்வியமைச்சு மற்றும் வடமாகாணக்கல்வித்திணைக்களத்தின் நிலைமை உள்ளது.

இந்த விடயங்களை சீர்செய்ய வலியுறுத்தியே எமது போராட்டம் அமையவுள்ளது - என்றார். (அ-ஒ-20)

### வடக்கு...

விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக அமெரிக்கா 9 ஆயிரத்து 300 தொன் யூரியா உரத்தை விவசாய அமைச்சிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது.

இந்த உரமானது, முதற்கட்ட உதவி என்றும் அடுத்துவரும் மாதங்களில் நாடு முழுவதும் உள்ள ஒரு மில்லியன் விவசாயிகளுக்கு விநியோகிக்க தேவையான யூரியா உரம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ-இ)

### சிட்டி...

மிகவும் ஆர்வத்துடன் இருந்தமையை நேற்றுக் காணமுடிந்தது. சிறிய சிட்டி விளக்குகள், நிறமூட்டிய சிட்டி விளக்குகள் போன்றன சந்தையில் காணப்படுகின்றன.

இன்றைய தினம் கந்தன் ஆலயங்களில் குமாராலய சொக்கப்பனை தீபமும், நாளைய தினம் வீடுகளிலும் விளக்கீடும் இடம்பெறவுள்ளன. (அ-ஒ-27)

### லிட்ரோ...

ரூபாவாலும், 5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 100 ரூபாவாலும், 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 45 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### பல்கலை...

கொடுப்பதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு கடந்த மாதம் 300 மாணவிகளின் கையெழுத்துடன் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் மாணவிகள் மீதான ஆசாமிகளின் பாலியல் தொல்லை தொடர்ந்தமையால், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்புற வீதியூடாக விடுதிக்குச் செல்லுகின்ற மற்றும் அந்தப் பகுதியிலுள்ள வாடகை அறைகளுக்குச் செல்லும் மாணவிகளையும் இலக்கு வைத்து, அங்கு வரும் இளைஞர்கள் தமது அந்தரங்க உறுப்புக்களைக் காட்டுவதுடன், மிக மோசமான ஆபாச வார்த்தைகளால் வசைபாடுவதாகவும் மாணவிகள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்துடன் தொடர்புபடாத இளைஞர்களே இவ்வாறான அநாகரிக செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுத்துவருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பல்கலைக்கழக மாணவிகள் இருவரை வழிமறித்து ஆபாச வார்த்தைகளால் பேசியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மோட்டார் சைக்கிளின் இலக்கத்துடன் கோப்பாய் பொலிஸில் உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கண்காணிப்பு அந்தப் பகுதிகளில் நேற்று மாலையிலிருந்து பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன் இருவர் கைது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞர்கள் இருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூளாய் - வேரம் பகுதியில் ஆள் நடமாட்டம் இல்லாத வீடொன்றை வட்டுக்கோட்டைப் பொலிஸார் சோதனையிட்ட போது சந்தேகத்துக்கிடமாக அமர்ந்திருந்த இரண்டு இளைஞர்களை பொலிஸார் மடக்கிப் பிடித்து சோதனைக்குட்படுத்தினர். அதன்போது இளைஞர்கள் இருவரிடமிருந்து 3 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து இளைஞர்கள் இருவருக்கு எதிராகவும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-14-125)


### பணிப்பெண் தேவை

வயோதிப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு : 077 440 7103 (CS 47956) (3/6)

### STUDENT VISA – 2023

1) Child education 5–17 years (both parent can go with the children)
2) Student Visa with the work
 a. Canada, UK and Australia – IELTS (6 – 6.5)
 b. Europe Countries (Germany,Swiss,Italy,France etc…) IELTS. தேவையில்லை.
 c. Tourist/Visitor Visa ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்

Application now in process - Register now
Minimum qualifications – A/L

வேலையுடன் கூடிய கற்கை நெறியினை தொடர விரும்புபவர்கள் கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிபரக்கோவையை அனுப்பவும்.

Visa Consultant:-
Adiyapatham Road, Thirunelvely, Jaffna. - T.P: 0770385584 - Email Id: naltcjaffna@gmail.com





### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**முத்தையா சிவசுப்பிரமணியம்**
(நாதஸ்வர வித்துவான்)

தோற்றம் 01.02.1947 — மறைவு 17.11.2021

ஆண்டு ஒன்று ஆயினும்
அன்பு முகம் மறக்கவில்லை
என்றும் உம்
நினைவாய் இருந்தே நாம்
தவிக்கின்றோம்.
தூண்டா மணி விளக்காய்
ஒளிவீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்



குடும்பத்தினர்
முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி.
077 905 8615

(CS 22106) (3.6)


### தேவை

சாவகச்சேரியில் வயோதிபர்கள் இருவரை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (CS 22102) (3/6)

077 793 8221, 077 782 1896

### A/L 2024, 2023
**PHYSICS**
(English and தமிழ் மூலம்)
M.Karunanithy (B.Sc)
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.
கலைமகள் வீதி, அரியாலை.
077 6183 064

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி** பகுதியில் **150 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ் நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**


# மரண அறிவித்தல்

## திரு.சிதம்பரப்பிள்ளை கந்தசாமி



தோற்றம் 01.07.1938 — மறைவு 05.12.2022

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மாசிவன் மற்றும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீதியை தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று (05.12.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், விமலபூசணியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் (ஜேர்மனி), தங்கம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், சடாட்சரம், ஜீவகாருணியம் மற்றும் கனகம்மா (கனடா), காலஞ்சென்ற ஜெகசோதி மலர் மற்றும் தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவபாஸ்கரன் (சாரங்கா நகைமாடம்), சறோஜினி (கனடா), தவராஜா (கனடா), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் உதயகுமார் (கனடா), காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் பாலசரஸ்வதி (கனடா), தர்சினி (சாவகச்சேரி), பாலகுமாரி (கனடா), இந்துராணி (பிரான்ஸ்), கலாலோஜினி (கனடா), புவிச்சந்திரன், புலேந்திரன் (சுவிஸ்), சதீஸ்வரன், பிரதாபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தனேஸ்வரன் மற்றும் மகிந்தன், கவிதாலோஜினி (ஜேர்மனி), நிகிர்தாலோஜினி (கனடா), நிர்மலாலோஜினி (பிரான்ஸ்), மதனரூபன் (லண்டன்), ஜசிந்தாலோஜினி, ரகுராஜலிங்கம், மகிந்தினி, புவீந்திரன், சுயந்தினி, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கண்டி வீதி சாவகச்சேரியில் உள்ள மருமகள் தர்சினி பீதாம்பரன் அவர்களது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.269, கண்டி வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
ப.சிவபாஸ்கரன்.
077 3577 212

(CR 38678) 1-6


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org